★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 36 பங்குனி 2 ஜ. ஆகி 11 இதழ் 63
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-3-84

## "பல்கலைக்கழக எல்லைக்குள் இராணுவத்தை அனுமதிக்கக்கூடாது"

### கல்பகேக்கு மாணவர் அவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"யாழ். பல்கலைக்கழக எல்லைக்குள், எந்தப் போலிக் காரணங்களை முன்னிட்டும் இராணுவத்தினர் பிரவேசிக்க அனுமதிக்கக்கூடாது" என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. சு. ஸ்ரீஸ்கந்தராசா, உயர் கல்வி அமைச்சின் செயலாளரும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருமான பேராசிரியர் ஸ்டான்லி கல்பகேயிடம் சமர்ப்பித்துள்ள ஆறம்சக் கோரிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆறம்சக் கோரிக்கைகளையும் நிறைவேற்றினால் யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புகள் பயிலும் 2,500 மாணவர்களும் அமைதியாக வகுப்புகளுக்குச் செல்வார்கள் என்றும், அடிக்கடி குழப்பமான நிலை ஏற்படாமல் பாதுகாக்க முடியும் என்றும் மாணவர் அவைத் தலைவர், பேராசிரியர் கல்பகேக்கு உறுதியளித்துள்ளார்.

மற்றும் கோரிக்கைகள் வருமாறு:-

"கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் காலத்தில் சட்டத்தரணி சென்று அவரைச் சந்திக்க அனுமதி வழங்கவேண்டும்.

"கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படக்கூடாது.

"கைதுசெய்யப்பட்ட 24 மணித்தியாலங்களுக்குள் விடுதலை செய்யவேண்டும்.

"கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் எவர்மீதாவது நிரூபிக்

(8-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ரூ. 1,00,000 கொள்ளை!

### கொள்ளையரைத் தேடி விமானப்படையினர் 'வேட்டை!'

(தமது மட்டக்களப்பு நிருபர்கள் இரா. துரைரத்தினம்—இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு தபாலகங்களில் இனம்தெரியாத இளைஞர் கோஷ்டியொன்று துப்பாக்கி முனையில் சுமார் ஒருலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளது!

இக்கொள்ளைச் சம்பவம் நேற்றுக்காலை 6-15க்கும் 6-30க்கும் இடையில் இடம் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்லாறு, பெரிய போரதீவு ஆகிய இரண்டு தபாலகங்களிலும் மேற்படி கொள்ளை இடம்பெற்றுள்ளது.

கல்லாறு தபால் அலுவலகத்தில் 60,000 ரூபாவும், பெரிய போரதீவு தபால் அலுவலகத்தில் 35,538 ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் களுவாஞ்சிக்குடி தபாலகத்தில் கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது பணம் எதுவுமே கொள்ளையடிக்கப்படவில்லையாம்.

நேற்றுக்காலை மட்டக்களப்பு புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்ட 4பேர் கொண்ட இளைஞர் கோஷ்டி, அவ்வீதி வழியாக வந்த மினிவானைக் கடத்திச்சென்று மேற்படி தபாலகங்களின் அதிபர்களைத் துப்பாக்கி முனையில் அவர் விடுதிகளிலிருந்து கூட்டிச்சென்று இத்தபாலகங்களைத் திறக்கச்செய்து பணத்தைக் கொள்ளையடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்ட மினிவான் பின்னர் அநாதரவான நிலையில் தந்தாமலைக் காட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

விமானப்படையினர் ஹெலிகாப்டரில் தாழப்பறந்து, கொள்ளையர்களைத் தேடும் வேட்டையில் நேற்று முழுவதும் ஈடுபட்டபோதிலும் இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (சு)

## ● அமைச்சர் திறந்துவைத்து ஒன்றரை மாதகாமாகிவிட்டது

# யாழ். புற்றுநோய் சிகிச்சை நிலையம் மூடப்பட்டுக்கிடக்கிறது!

(மாவிட்டபுரம் நிருபர் ஞானசுந்தரம் இராமநாதன்)

யாழ். புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தை சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து உத்தியோக பூர்வமாகத் திறந்துவைத்து ஒன்றரை மாத காலமாகியும் மூடப்பட்ட நிலையிலேயே இன்னும் இருக்கிறது.

புற்றுநோய்க்குச் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படும் நோயாளர்கள் புற்றுநோய்க்குச் சிகிச்சை பெற முடியாமல் நீண்டகாலமாகக் கஷ்டம் அனுபவித்து வந்ததால் இக்கஷ்டத்தைப் போக்குமுகமாகத் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைகளில் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையமொன்று அமைக்கப்பட்டு அங்கு 'கோபால்ட் யூனிற்' என்பனவும் இணைக்கப்பட்டுள்ளன.

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் பெயரால் அமைந்த இப்புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் கடந்த ஜனவரி மாதம் 24ம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

திறப்பு விழாவையடுத்து இச்சிகிச்சைநிலையம் இயங்கும் எனப் பொதுமக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அது தொடர்ந்து பூட்டிய நிலையிலேயே இந்நிலையம் இருந்துவருகிறது.

இப்புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டது குறித்து அறிந்ததும் யாழ் மாவட்டத்திலுள்ள புற்றுநோயாளர்கள் மட்டுமல்ல; மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவுனியா போன்ற பல வேறு தூர இடங்களிலிருந்து

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திய உல்லாசப் பயணிகள் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு உல்லாசப் பயணிகளாக வருவோர் தொகை மிகக் குறைந்துள்ளது. ஜூலைக் கலவரங்களைத் தொடர்ந்தே இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த ஆண்டு குறித்த இலக்கையிடவரை லாகி உல்லாசப் பயணிகளே இங்கு வந்துள்ளதாக உத்தியோகபூர்வமான அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

83 566 பேரே கடந்த ஆண்டு இங்கு வந்துபோன உல்லாசப் பயணிகள் மொத்தத் தொகையாகும்.

## டாக்டர் ஜனார்த்தனம் மீண்டும் அ. தி. மு. க. வில்!

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்னையில் மிக அக்கறையுள்ளவராக இருக்கும் தமிழக மேல்சபை உறுப்பினர் டாக்டர் இரா. ஜனார்த்தனம் மீண்டும் எம் ஜி. ஆரின் அ. தி. மு கழகத்தில் நேற்றுச் சேர்ந்தார்.

ஜூலை கலவரத்தின் பின், மேல்சபையில் தான் வகித்த 'கொறடா' பதவியை ராஜினாமாச் செய்ததுடன், 'இலங்கைத் தமிழர்களுக்காக தீவிரமாகப் பாடுபடுவதற்கு இந்தப் பதவி ஒரு தடையாக இருக்கக்

(8-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி வெடித்தது!

(டலோவி)

பருத்தித்துறை தபால் அலுவலகத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் துப்பாக்கி வெடித்தபோதிலும், யாரும் காயமடையவில்லை.

பருத்தித்துறை கரவெட்டி பகுதிகளைச் சேர்ந்த ஓர் ஊழியம்

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிக்கு தனியான மாவட்ட அபிவிருத்திசபை

(கொழும்பு)

புதிய மாவட்டமான கிளிநொச்சியை புதிய மாவட்ட அபிவிருத்திசபையாகச் சேர்த்துக்கொள்வதற்காக மாவட்ட அபிவிருத்திசபைகள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

புதிய திருத்தங்கள் இனிமேல் செய்யப்படாதவகையில் புதிய மாவட்ட சபைகளைச் சேர்த்துக்கொள்ளக்கூடிய விதத்தில் இந்தச் சட்டம் திருத்தப்படவிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்துடன் இணைந்திருந்த கிளிநொச்சிப் பகுதி சமீபத்தில் புதிய மாவட்டமாக அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டது தெரிந்ததே.

## வவனியாவில் நேற்று 10 இளைஞர்கள் கைது

(வவனியா)

வவனியாவில் நேற்று மட்டும் பத்து இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

வவனியாவில் தாண்டிக்குளம், குடியிருப்பு, மரைக்கலம் பிட்டி ஆகிய பகுதிகளில் இந்த இளைஞர்கள் கைதுசெய்

(8-ம் பக்கம் பார்க்க)


# இரும்பு விநியோகம்

இலங்கை உருக்கு கூட்டு ஸ்தாபன
மொத்த சில்லறை விற்பனையாளர்களாக
நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

உங்களுக்குத் தேவையான கட்டிட
இரும்புப் பொருட்களுக்கு எம்மிடம்
தொடர்பு கொள்ளுங்கள்.

விலைகள் அந்தர்
620/- முதல் 650/- வரை

★ விநியோக வசதிகளும் உண்டு. ★

M. கருணாதேவி J. C. C. Ltd.
உரும்பிராய் சந்தி—உரும்பிராய்
1811

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய மொடல் (185 மொடல்) CD 125T 86 ஸ்ரீ மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் (லக்கேஜ் பொக்ஸ், இரண்டு ஹெல்மெட், சைட் கவருடன்) உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: 330, நாவலர் ரோட், நல்லூர்-தெற்கு. 1361

C. G 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும் 145, நவீன சந்தை, யாழ்ப்பாணம் 1366

9 ஸ்ரீ தொடரிலக்க மொறிஸ் ஒக்ஸ்போர்ட் (Morris Oxford 71 மொடல் 2nd Owner) உன்னதமான நிலையில் உடன் விற்பனைக்குண்டு. சிவப்பு நிறம்-திறமான பெயின்ற், ஸ்ராஸ்டரிட் எஞ்ஜின், கசெற் றேடியோ, ஒறிஜினல் சீற் உண்டு. A. ஸ்ரீதரன், மின்சார சபை, சுன்னாகம் அல்லது ஊரிக்காடு, வல்வெட்டித்துறை 1357

ஊரெழு, பலாலி வீதி பிள்ளையார்கோவிலுக்கு அருகில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (வீடு கட்டவோ, தொழிற்சாலைக்கோ உகந்தது. வ. தர்மலிங்கம் ராஜ்மகால், ஊரெழு 1355

சாவகச்சேரி தபாலகத்துக்கு அருகாமையில் வீடு கட்டுவதற்கு ஏற்ற கிணற்றுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். கா. விமலநாதன், லிங்க வாசா", ஆலடிப்பிட்டி ஒழுங்கை, சாவகச்சேரி. 1807

ஜோன்சன் அவுட்போட் மோட்டர் 11 அடி கண்ணாடி இழை வள்ளமும், ஹொண்டா CD 185 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. பார்வையிடுவதற்குத் தொடர்புகொள்ளவும் 61, கோவில் வீதி, யாழ்ப்பாணம். போன்: 23172. [1868]

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கருகாமையில் இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சதுரமான காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க ஆ. பசுபதி, இரண்டாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை 1374

ஒஸ்ரின் பரீனு 3ஸ்ரீ ஒஸ்ரின் A 50, EN கார்கள் விற்பனைக்குண்டு சு. சச்சிவேந்திரன், நீர்வேலி தெற்கு. நீர்வேலி. 1332

சாயம்போட்ட நூல்களும், சலவை நூல்களும் 40s 50s இல் நியாயமான விலைக்கு விற்பனைக்கு உண்டு. விரும்பிய நிறங்களில் சாயம் போட்டுக் கொடுக்கப்படும். வே. சின்னத்துரை 'அம்பிகை வாசா' ஆஸ்பத்திரி முன்பு சாவகச்சேரி. 1340

நல்லூரில் 2பரப்புக்காணியில் 4அறைகொண்ட வீடு. தொடர்பு: இ. பாலசுப்பிரமணியம் சட்டத்தரணி 52வைமன்வீதி, நல்லூர். தொலைபேசி: 22334 1344

## வாடகைக்கு

மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய நடுத்தர வீடு காலியாகவுள்ளது. வாடகை முற்பணம் ரூ. 15,000/- விண்ணப்பிக்கவும். செ. கனகரத்தினம், 4-ம் கட்டை, ஆனைக்கோட்டை. 1371

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அல்லது திருநெல்வேலி கொக்குவில் பகுதியில் வீட்டுடன் காணி அல்லது 2 பரப்புக் காணி விலைக்குத் தேவை. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1354 மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம். 1354

சிமெண்ற் பைப்ஸ், சிறிய பைகள் ஒட்டுவதற்கு ஆட்கள் தேவை சம்பளம் நேரில் பேசலாம் தொடர்பு: A. குமரேஸ்வரன். 88, சிவன்கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 1369

கேற், கிறில் வேலைகளில் அனுபவமுள்ள ஒட்டுனர்கள் (Electric Welders) உடன் தேவை; விப்பி கம்பனி, 375, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1367

கொழும்பில் தற்பொழுது தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் 6 வருட அனுபவமுள்ள ஆங்கில சுருக்கெழுத்து/தட்டெழுத்தாளருக்கு யாழ்ப்பாணத்தில் வேலை தேவை. தொடர்பு: திருமதி R. சிவப்பிரகாசம் மே/பா S. நடராஜா, 38/2, றெயில்வே அவெனியூ, கொழும்பு 5. போன்: 25875. (1363)

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. 40 வயதிற்கு மேற்பட்ட தகுதியுள்ளவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். துரை பாதுகாப்புச் சேவை, (அண்ணா இண்டஸ்றீசுக்கு அருகாமை), தாவடி வடக்கு, கொக்குவில். 1372

## தேவை

பளையிலுள்ள கிறிஸ்தவ ஸ்தாபனத்தின் தென்னந்தோட்டத்திற்கு ஒரு மேற்பார்வையாளர் தேவை இத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பஞ்செய்யவும். தொடர்பு: Rev. M இராஜகுலேந்திரன், வரணி மிஷன் பண்ணை, வரணி. 1365

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

புலோலி மேற்கு தம்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சந்திரசேகரர் சிவதாசனின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயமாக

-மரணமெய்தியவர் சந்திரசேகரர் சிவதாசன் கைம்பெண் சந்திரதிலகம். தம்பசிட்டி, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

-மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்க } வழ.இல. 1178

எதிராக

பராயமற்றவர்கள் {
1. சிவதாசன் பிரேமானந்
2 சிவதாசன் மகள் சசி
3. சிவதாசன் பிரேம்குமார்

யாவரும் தம்பசிட்டி. புலோலி பருத்தித்துறை

4. சந்திரசேகரர் சிவானந்தன், சிங்கவாசா, கோப்பாய்.

-எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் ஆதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு சித்திரைமாதம் 6ம் திகதியன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு மாசி மாதம் 2ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,

றிச்சேட்
ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.

வரைவு:
பா. சுப்பிரமணியம்,
மனுதாரரின் சட்டத்தரணி. 1261

## சேவை

வெளிநாடு போக ஆவலுடன் துடிக்கிறீர்களா? Factory வேலைகளாக டிரைவர்களாக மத்திய கிழக்கு போக நாம் இலகுவழி காட்டுகிறோம். முத்திரையும் விலாசமும் கூடிய கடித உறையுடன் உடன் தொடர்பு கொள்ளவும் The Director, P. O. Box: 1967 Colombo. 1132

சகல இன, மத, குலங்களின் எம்மிடம் மணமக்கள் உள்ளனர் உங்கள் தேவைகளை உடனடியாக நாம் பூர்த்தி செய்வோம். விபரங்கட்கு (F)பைநான்சியல் அசோசியேசன் 402 1/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் சிவன் கோவிலடி) 1240

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## தூதராலயச் செயலாளருக்கு
## மணமகள் தேவை

கொழும்புப் பல்கலைக்கழக சிறப்புப் பட்டதாரியும் வெளிநாடு ஒன்றில் இலங்கைத் தூதராலயச் செயலாளராகப் பணியாற்றுபவருமான முப்பத்தொரு வயதான சைவ போசனமுடைய செவ்வாய் தோஷமற்ற மணமகன் தமது ஒறுகிய லீவில் மணஞ்செய்ய விரும்புகிறார். பெண் ஆதி சைவ அல்லது செட்டி வம்ச அல்லது சுத்த போசன வேளாள குடும்பத்தில் 20 — 28 வயதும் கல்வித் தகைமையும் அழகும் உடையவராயிருத்தல் வேண்டும். சீதனம் எதிர்பார்க்கப்படும்.

தொடர்பு:

சி. பிறைகுடிக்குரு,
ஆசிரியர்,
சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். 1858


இன்று மங்களகரமான
★ திறப்பு விழா ★
STE HARDWARES
இன்று 15-3-84
வியாழக்கிழமை
பகல் 11-59 முதல் 1 41 மணி வரை
வரும் சுபவேளையில்
ஆரம்பித்துவைக்கப்படுகிறது
எஸ்ரி. காட்வயர்ஸ்,
88, பாங்சால் வீதி,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்
தங்கள் நல்வரவை நாடும்
கே. ஆர். சிவனடியான்,
எஸ். என். தெய்வேந்திரன்.
(1333)





முதலாம் தவணைப்
பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்க்கு
இதோ ஒரு துணை நூல்
விஞ்ஞானம் 6
ஆசிரியர்: நா. கணேசபிள்ளை
மாணவர்
★ தாமாகவே செயலில் ஈடுபடவும்
★ விஞ்ஞான மனப்பாங்கை வளர்க்கவும்
★ தாம் கற்றவற்றை, அவதானித்தவற்றைப் பதிவு செய்யவும்
★ ஒழுங்கான முறையில் அலகுகளை மீட்கவும்
இந்நூல் துணை புரியும்.
விலை ரூபா 16-50
கிடைக்குமிடம்
ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை, கே கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(1849)



அன்னையின் ஆலயத்திற்கு
உங்கள் உதவி





யாழ் வைத்தியசாலை வீதி மத்தியில் அமைந்த அன்னை ஆரோக்கிய நாயகியின் ஆலயம்; அளப்பரிய நலன்புரியும் அன்னை வேளாங்கண்ணியின் உறைவிடம் அவள் வரம் பெற்று அவளால் சுகம் பெற்று நன்றிநவில அவள்பாதம் சரணம் என்று வரும் பக்தர்களை அரவணைக்கும் அவள் புனித ஆலயம்.
இன்று
இடிந்த சுவருடன், எப்பாகமும் மோசமான ஆபத்தான பரிதாபத்துக்குரிய நிலையில் உள்ளது.
அன்புப் பக்தர்களே! உபகாரிகளே;
உங்கள் நிதி உதவியாலும் கட்டிடப் பொருளுதவியாலும் இக்குறையை தீர்க்க முன்வரமாட்டீர்களா?
அருள்கனிப் பொழியும் அன்னையின் ஆலயக் குறையினைத் தீர்க்க உங்கள் கரங்களை நீட்டமாட்டீர்களா?
நன்றியுடன் உதவியை வேண்டுகிறோம்.
தொடர்பு கொள்ளவேண்டியது:
தவத்திரு. பிரான்சிஸ் டானியல் அ. ம. தி.
(வைத்தியசாலை ஆன்மகுரு)
"தொடர்பகம்"
657, மருத்துவ மனைச்சாலை யாழ்ப்பாணம்.
(1370)

# லெபனான் போர் நிறுத்தத்துக்கு சுவிஸ் மகாநாட்டில் இணக்கம்!

## விமான நிலையங்களை உடன் திறந்துவிடவும் முடிவு

சூரிச் மார் 14

லெபனானில் நீண்ட காலமாக போரிட்டுவந்த குழுக்கள் போர்நிறுத்தத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

லெபனானின் அரசியல் தலைவர்கள் சுவிற்சர்லாந்தின் லோசன் நகரில் நடத்தி வந்த சமரச மாநாட்டில் இந்த இணக்கம் காணப்பட்டது.

லெபனான் ஜனபதி ஜமாயல் உட்பட போரிட்டுவந்த பல வேறு குழுக்களின் தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு இந்த இணக்கத்

(7-ம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தஇணக்கத்திற்கு சற்று முன்னரும் சண்டை

### 24 பேர் பலி; 40 பேர் காயம்

பெய்ரூட் மார்ச் 14

லெபனான் சமாதானப்பேச்சுக்கள் சுவிற்சர்லாந்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை யிலும் லெபனானில் கடும் யுத்தம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது

சமாதானப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டு போர் நிறுத்த அறிவிப்பு வெளியாகுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னரும் பலத்த சண்டை இடம்பெற்றது

இச்சண்டைகளில் 24 பேர் பலியாகினர். 40 பேர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

## எல்சல்வடோரில் மீண்டும் சண்டை!

சன்சல்வடோர், மார்ச். 14

எல்சல்வடோரின் அரசபடையினருக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்குமிடையே தொடர்ந்து சண்டை இடம் பெற்றுவருகிறது

அண்மைக் காலமாக தணிந்திருந்த சண்டை மீண்டும் உக்கிரமடைந்துள்ளது.

வீதிகளில் அநாதரவான சிறுவர்கள் மட்டுமே காணப்படுகின்றனர். சண்டையின் போது பெற்றோரை இழந்த சிறுவர்களுக்குசமூகஸ்தாபனங்கள் உதவிவருகின்றன. (கு)

## பஞ்சாப் முன்னாள் முதல்வர் கொலைமுயற்சியில் தப்பினார்!

### காரில் சென்றுகொண்டிருந்தபோது துப்பாக்கிப் பிரயோகம்

புதுடில்லி மார் 14

பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு தர்பாரா சிங் கொலைமுயற்சி ஒன்றிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்!

காரில்சென்றுகொண்டிருந்த போது அவரை நோக்கி இனந்தெரியாத நபரொருவர் துப்பாக்கிப்பிரயோகம் நிகழ்த்தினார்.

தெய்வாதீனமாக காயங்கள் எதுவுமின்றி திரு தர்பாராசிங் தப்பிவிட்டபோதிலும் அவருடன் காரில் சென்ற நால்வர் பலத்த காயங்களுக்குள்ளாகினர். இவர்களில் ஒருவர் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன

துப்பாக்கிப்பிரயோகம் நிகழ்த்திய நபரைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலிசார் தீவிர கவனஞ் செலுத்தி வருகின்றனர். (கு)

## ஈரான் - ஈராக் யுத்தநிலைமை: அரபுலீக் அவசரக் கூட்டம்!

பாக்தாத் மார் 14

ஈரான் - ஈராக் யுத்தம் குறித்து ஆராய்வதற்காக அரபுலீக்கின் அவசர கூட்டம் ஒன்று இன்று ஆரம்பமாகிறது.

ஈராக்கின் கோரிக்கையின் பேரிலேயே இந்த அவசரகூட்டம் கூட்டப்பட்டது.

உலகில் பெரும் ஆபத்தை விளைவிக்கும் என எதிர்பார்க்கப்படும். இந்த யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப் படவேண்டியதன் அவசியத்தைஉணர்ந்தே அரபு லீக்கின் கூட்டத்துக்கு கோரிக்கை விடுத்ததாக ஈராக் தெரிவித்துள்ளது.

லீக்கின் இந்த அவசரகூட்டம் நேற்று ஆரம்பிக்கவிருந்த போதிலும் சூடான் பிரதிநிதியின் வருகை தாமதமாகிய தால் ஒருநாள் ஒத்திவைக்கப்பட்டது

யுத்தத்தின்போது நச்சுத் தன்மையுள்ள இரசாயனப் பொருட்களை ஈராக் பாவித்ததாகஈரானின் குற்றச்சாட்டை மறுத்துள்ள ஈராக், தவறான இக்குற்றச்சாட்டுக் குறித்து ஆராயவேண்டும் என்றும் கோரியுள்ளது (கு)


## கோழிப் பண்ணையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

வலிமையானதும் குறைந்த உணவில் கூடிய நிறையைத் தரவல்லதுமான சர்வதேசப் புகழ்வாய்ந்த ஹைப்புறோ புறொயிலர் ஒரு நாள் இறைச்சிக் கோழிக்குஞ்சுகளை (ONE DAY OLD HYBRO BROILER CHICKS) யாழ்ப்பாணத்தில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஏற்ற வசதி செய்துள்ளோம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேஷ கழிவு வழங்கப்படும்.

250 குஞ்சுகள் வரை – 10%
250 குஞ்சுகளுக்கு மேல் – 15%

உங்கள் தேவைகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

**பைரஹா பாம்ஸ்**

கட்டானை தொலைபேசி: 031-2508

**BAIRAHA FARMS**

KATANA Telephone: 031 — 2508

Props:- M I. M. NALEEM HAJIAR and Co., Ltd

உரிமையாளர்கள்: M. I. M. நளீம் ஹாஜியார் அன் Co., Ltd.

உங்கள் பண்ணைக்கே நேரில் கொண்டுவந்து விநியோகிப்பதற்கு கீழ்காணும் எமது வடபகுதி விநியோகஸ்தருடன் தொடர்பு கொள்ளவும்

**ந. சற்குணராசா & பிறதர்ஸ்**

ஸ்ரேசன் றோட், பிரம்படி கொக்குவில்.


## "ஆசிரியர் பற்றுக்குறை; அதற்குள் இடமாற்றமா?"

### அபிவிருத்தி சங்கச் செயலாளர் கவலை

(மானிப்பாய்)

"பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றுக்குறையிருக்கும் போது இந்தப்பாடசாலைகளில் இருந்து திட்டமற்றமுறையில் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது மிக்க வருந்தத்தக்கது" என்று ஆனைக்கோட்டை அ மி த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் இச்சங்கத்தின் செயலாளர் திரு. எம். லோறன்ஸ் பேசும் போது எடுத்துக் கூறினார்

மேற்படி கூட்டம் இச்சங்கத்தின் தலைவரும் அதிபருமான திரு ந சிவபாதம் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் திரு. லோறன்ஸ் தமது பேச்சின் போது மேலும் கூறியதாவது:

இப்பாடசாலையில் ஆங்கில உதவி ஆசிரியர் கடந்த ஆறு மாதகாலமாக இல்லாதிருக்கின்றார். இன்னும் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றார்கள் இந்த நிலையில் ஆசிரியை ஒருவரை இப்பாடசாலையிலிருந்து திடீரென மாற்றியமை இங்குள்ள மாணவர்களின் கல்வி பாதிப்புறவழி அமைப்பதாக இருக்கின்றது." ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படுமுன் பாடசாலையின் நிலைமையை சிறிது அவதானிப்பது நல்ல பலனைத் தருவதாக இருக்கும்" என்றும் அவர் வேண்டுகோளொன்றை விடுத்தார்

மாற்றலாகிச் சென்ற ஆசிரியையின் இடத்துக்கு உடனடியாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டுமெனவும் ஆங்கில உதவி ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமெனவும் தாம் கல்வித்திணைக்களத்

(7ம் பக்கம் பார்க்க)

## "முன் மாதிரியாகத் திகழும் பாடசாலை"

### யாழ். கல்வி அதிகாரி பாராட்டு

(மானிப்பாய்)

"முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான வகுப்புக்களை உள்ளடக்கும் ஆரம்ப பிரிவில் இன்று ஒன்றிணைந்த பாடத்திட்டம் நடைமுறையிலுள்ளது. இத்திட்டத்தில் நூலகத்திற்கும் வாசிப்புக்கும் முக்கிய இடம் வழங்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வகுப்பிலும் 'புத்தகமூலை' அமைய வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. இவ்விதியை நடைமுறைப்படுத்துவதில் பல இக்கட்டுகள் உள்ளன. இச்சிக்கல்

[7-ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

மனதையொரு வில்லாக்கி வாக்பொறியை நாணாக்கி எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம்?

—பத்திரகிரியார்

## நமதுநோக்கு

# கவனம்; கோச் வருகிறது

"ஆள் கைது செய்யப்பட்டதா? அப்படியானால் முடிந்தது விடயம்" இன்று யாழ்ப்பாணத்தில் இவ்விதப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பித்திருக்கிறது.

பரந்தனில் மூன்றுநாள் அதிகாலை இடம்பெற்ற சம்பவம் எங்கள் இளைஞருக்குத் தெளிவான விளக்கம் கொடுக்கின்றது.

பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவர் கொடுத்த தகவல் தொடர்பாக வீடொன்றைச் சோதனையிட்டுக் கொண்டிருந்த வேளையில் அவர் தப்பி ஓடினாராம். இராணுவத்தினர் சுட்டதாகவும், வீட்டிற்கருகே சடலம் காணப்பட்டதாகவும் செய்தி கூறுகிறது.

மானிடனாய்ப் பிறந்த மனித உரிமைகள் பலவற்றிற்கு உரித்தானவனாய்ச் சர்வதேச ரீதியில் கணிக்கப்பட்டுவரும் பிறவி ஒன்று உயிரற்றசடலமாகக்காணப்படும் காட்சி இன்று யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரணம். பெரியோர் பலர் உதித்த இந்தப் புண்ணிய பூமி என்றும் காணாதகாட்டுமிராண்டித்தனம்.

கொள்ளையைத் தடுக்க முன்வரும் வீரன் ஸ்தலத்திலே மரணம்; 'சமூக விரோதிகள்' என்ற பட்டியலில் இடம்பெறுவோருக்கு எச்சரிக்கைக்குப்பின் மரணதண்டனை துரிதமாக நிறைவேற்றப்படுகிறது. இவ்விரண்டையும் இணைத்து இதொரு உடயகுறி நவீன உற்பத்தியென்று இதனைப் பூண்டோடு ஒழித்துவிடும் திட்டம் மூன்றாவது. பரந்தன் சம்பவம் இதற்குஉதாரணம்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் ஒருவரும் தூக்கிலிடப்படவில்லை. இந்தப் பெருமைக்கு பேரிழுக்குத் தேடித்தருவது 'பயங்கரவாதத்தை' ஒழிக்கும் 'பாசுபதாஸ்திரம்'.

யாழ்ப்பாணத்தில்நிலவும் அட்டூழியங்களை நாம் எவ்விதத்திலும் நியாயப்படுத்த முயலவில்லை. ஆனால் இந்தப் பதற்ற நிலையில் உயிர் வாழும் பொதுமக்கள் வாழ்க்கை நடத்தத் திண்டாடுகின்றனர். இந்தவேளையில் ராணுவ கெடுபிடிகள் எவ்வளவு அவசியமானாலும், உயிரைப்பறிக்கும் உரிமை கட்டுப்பாடின்றி வழங்கப்படுவதால் யாழ்ப்பாணம் கொலைக்களமாகிவிடுகிறது.

யார் கைது செய்யப்படுகிறார்; அவர் பற்றியதகவல்கள் கிடைக்காது; அவருடைய உண்மை நிலைபரம் அறியாது அவருக்கு உரித்தானவர் வாழும் விபரம் எந்த நெருக்கடியிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இராணுவ ஆட்சி தலையெடுத்த கட்டத்திலும் மக்களுக்கும்அரசுக்கும்தொடர்பான அதிகாரி அரச அதிபரே.

இன்றைய ஆபத்தான நிலையிலும் இந்தக் கடமையை இன்றைய அரச அதிபர் திரு தேவநேசன் நேசையா மிக அமைதியாகவும், பொறுமையுடனும், திறமையுடனும் செய்து வருகிறார்.

பரந்தன் சம்பவம் இராணுவத்தினரின் செய்தி: இது உண்மையாகின் இளைஞர் தப்பியோட முனைந்தது பெருங்குற்றம்; ஆனால் தண்டனை துப்பாக்கிச்சூடா? உயிரைப் பாதுகாப்பது இராணுவத்தின் கடமை யல்லவா?

எந்தச் சட்டமும், எந்த நெருக்கடியிலும் மனித உயிரைப் பாதுகாப்பது முதல் நோக்கமாகக் கொண்டது; இதற்கு நாம் சட்டப் புத்தகங்களை புரட்டிப் பார்க்கத் தேவையில்லை.

உள்நாட்டுப்போர், வெளிநாட்டு யுத்தம், பயங்கர கலவரம் போன்ற அசாதாரண நிலைமைகளில் அவற்றிற்குரிய நடவடிக்கைகள் வேறு.

இன்றைய சட்டத்தின் எவரையும் சந்தேகத்தில் கைது செய்யலாமென்றும், தடுப்புக் காவலில் வைக்கலாமென்றும், அபாயக் கட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகமும் இராணுவத்தினருக்கு உண்டு.

அந்த அதிகார பலத்தை துஷ்பிரயோகம் செய்தால் அதற்கு நிவாரணம் என்ன? நீதிமன்ற விசாரணை என்ற முட்டுக்கட்டை முற்றாக நீக்கப்பட்டது. தடுப்புக்காவலின் அபாயத்தை திருமதி பண்டாரநாயக்கா தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்த நிலைமையில் மக்கள் வாழ்வு மேலும் மோசமடையாது, நிலவும் அமைதியை பாழாக்காது, சமத்துவ புத்தியுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்வது இன்றைய நிலையில் சாத்தியமா?

யாழ்ப்பாணத்தின் 'தடை விதிக்கப்பட்ட இயக்கத்தின்' அடக்கை அடக்குவதில் எவ்வித ஆட்சேபமுமில்லை. துப்பாக்கிப் பிரயோகம் எவ்வகையிலும் ஒழிக்கப்பட வேண்டும்; ஆனால் மக்களைக் கொன்று குவித்துத்தான் அது ஆக வேண்டும், அல்லது மக்கள் நடுக்கத்தில் வாழும் வகையில் அது ஆக வேண்டுமென்ற கொள்கை அறவே கைவிடப்பட வேண்டும்.

தென்னிலங்கைத் தமிழ் மக்கள் வீடு திரும்பிய படலம் முற்றாக முடியுமுன், வீடுதேடி வருகிற காலனை அரசாங்கம் சாவதானமாக அகற்றிவிட வேண்டும்.

சிங்கள எதிர்க்கட்சிகளையும் சிங்கள மக்களையும் திருப்திப்படுத்த வேண்டுமானால் இச்சிக்கலை அவர் புரிந்து தக்கவாறு உதவ இடமளிக்கவேண்டும்.

## ஈழத்துச் சிதம்பரம் நாளை தேர்

[காரைநகர்]

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது.

நாளை வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் 18-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை திருக்கலியாணத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (கு)

# 'இனக்கலவரத்தின் பின்பும் பிறநாடுகள் நல்லெண்ணம்'

## ராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

"கடந்த ஆண்டு ஜூலை இனக்கலவரத்தின் பின்னரும் எமது நாட்டின் மீதான நம்பிக்கையும் நல்லெண்ணமும் வெளிநாட்டினர் மத்தியில் மாறிவிடவில்லை என்பதற்கு உதாரணமாக 'ஹில்டன்' சர்வதேச ஹோட்டல் இலங்கையில் கட்டப்படுகிறது."

இவ்வாறு ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ த அல்விஸ் தெரிவித்தார்.

கொழும்பு எச்சலன் சதுக்கத்தில் சர்வதேச ஹில்டன் 5 நட்சத்திர ஹோட்டலுக்கான கட்டிட ஆரம்ப வேலைகள் ஜப்பானிய பௌத்த முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டன. ஜப்பானிய பௌத்தமத தலைவர் இவ்வைபவத்தை நடத்தினார்.

எமது உல்லாசப் பிரயாணத்துறை வளர்ச்சிக்காக 'ஹில்டன்' ஹோட்டல் ஒன்றை நிறுவவேண்டும் என நாம் என்றோ கண்ட கனவு இன்று நனவாகிறது.

உலகின் மேது மிகவும் அழகிய நாடாகிய இலங்கையில் உல்லாசப் பிரயாணத்துறையை வளர்க்க ஜப்பான் உதவி செய்வதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியும் நன்றியும் உடையவர்களாக இருக்கிறோம்.

இவ்வைபவத்தில் பங்கு பற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா பேசுகையில் கூறியதாவது:

"தென்கிழக்கு ஆசியாவில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக தலைசிறந்த பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பேணிப்பாதுகாத்துவரும் நாடாக எமது நாடு திகழ்கின்றது.

"எமது நாட்டுக்கு இடதுபுறமும் வலதுபுறமும் சர்வாதிகார ஆட்சியினை எம்மால் காணமுடிகிறது. ஆனால் நாம் அதனை என்றுமே நிராகரித்து வருகிறோம்.

எமக்கு பெரும் செல்வத்தைத் தேடித்தரும் உல்லாசப் பயணத்துறையை இந்த அரசு மட்டுமல்ல கடந்த அரசும் அபிவிருத்திசெய்து வந்தது. இன்று எமது உல்லாசப் பயணத்துறை ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸின் கீழ் பெரும் அபிவிருத்தி கண்டுள்ளது. இந்த அபிவிருத்தியின் ஒரு முக்கிய கட்டமாகவே இந்த சர்வதேச ஹில்டன் ஹோட்டல் இங்கு கட்டப்படுகிறது."

இலங்கை - ஜப்பான் - அமெரிக்க கூட்டு முயற்சியாக நிறுவப்படும் இப்பாரிய ஹோட்டல் 86ம் ஆண்டு திறந்து வைக்கப்படும். (இ-கு)

# முஸ்லிம் எழுத்தாளர்களுக்கு பேருதவியாக இருந்துவருபவர்"

## சிவகுருநாதனுக்கு அமைச்சர் பாராட்டு

[கொழும்பு]

"தமிழ் இனத்தவராக இருந்து கொண்டு தமிழ்பேசும் மக்கள் என்ற நீதியில் முஸ்லிம் மக்களினதும் எழுத்தாற்றலை விருத்திசெய்ய பேருதவிசெய்து வரும் திரு இ. சிவகுருநாதன் பெரிதும்பாராட்டுக்குரியவர்."

இவ்வாறு முன்னாள் சபாநாயகரும் தற்போதைய அமைச்சருமான அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தலைவரும் தினகரன் பிரதம ஆசிரியருமான திரு. ஆர். சிவகுருநாதன் முதுகலைமாணி பட்டம்பெற்றமையை முன்னிட்டு கலை இலக்கிய நண்பர்கள் அளித்தபாராட்டு விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு மெயின்வீதியில் உள்ள முஸ்லிம் லீக்வாலிப முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவகுருநாதனுக்கு பொன்னாடையும்போர்த்தப்பட்டது.

திரு சிவகுருநாதன் தமக்களிக்கப்பட்ட பாராட்டுவிழாவுக்கு நன்றிதெரிவித்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழ் இனத்துக்கு தமிழ் மொழிக்கு நான் இதுவரை என்ன செய்துவிட்டேன் என்ற எண்ணம் எழுந்தபோது எனது முதுகலைமாணிப்பட்டத்துக்கு பத்திரிகைத் தொழில் பற்றி கட்டுரையைச் சமர்ப்பிப்பதென்றுமுடிவுசெய்தேன்.

"தமிழ்ப் பத்திரிகைத்துறையின் வரலாற்றை அநேகர் அறியாதிருக்கின்றனர். எனது இந்த ஆய்வுக்கட்டுரை எதிர்காலசந்ததியினருக்குத் தமிழ் பத்திரிகைத்துறையின் வரலாற்றை எடுத்துவிளக்கும் என்பதில் ஐயமில்லை.

எழுத்தாளர்கள் இலக்கியத்துக்குமட்டுமல்ல, சமூகத்திற்கும் பணியாற்ற வேண்டும் என சிறுவயது முதல் விரும்பியவன் நான். எனது இந்த ஆவலை இன்று என்னால் பத்திரிகைமூலம் செயல்படுத்த முடிகிறது. என்பதில் மகிழ்ச்சியடைகிறேன்." (இ-கு)

### இடம்பெயர்ந்த ஆசிரியர்கள்:

# வடக்கு,கிழக்கில்இடமாற்றம் பெற்றோர் விபரம்

(கொழும்பு)

ஜூலைக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களில் வடக்குக் கிழக்குப் பகுதிக்கு இடமாற்றம்பெற்ற ஆசிரியர்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.

[நேற்றைய தொடர்ச்சி]

**கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்**

பிரேமாவதி முருகமூர்த்தி [செல். ஆன்ஸ் மகளிர் வி. கொழும்பு], அற்புதமணி கிருபைராஜா [மாவத்த ஜி. ரி, எம். எஸ். நாரஹேன்பிட்டி கொழும்பு], ரூபி அக்னஸ் ஜோன்பிள்ளை [செல். ஆன்ஸ் ரி. ஜி. கொழும்பு], சிவநேசமலர் நல்லநாதன் [கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயம்], எல். குமாரசாமி [பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி], ஜி. பொன்னையா [பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி], ஏ. குகதாசன் [கணபதி வித்தியாலயம் கொழும்பு], புஷ்பம் கமலாவதி செல்வராஜ் [புனித ஜெருசாதி தமிழ் வித்தியாலயம் கொழும்பு]. பி. கணேஷ் [தெமட்டகொட தமிழ் மகா வித்தியாலயம்], விவேகானந்தன் [செல் மேரிஸ் ஆர். சி. ரி எம். எஸ். பம்பலப்பிட்டி கொழும்பு], ஜே குமாரசாமி [இசிபத்தான ம வி. கொழும்பு], என். சிறிகாந்தன் [வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயம் பாமன்கடை], பி. சிவானந்த சோதி [பிறஸ்பிரேறியன் மகளிர் பாடசாலை கொழும்பு], உலகவதி செல்லர் [விவேகானந்த ம. வி. கொழும்பு]. என். சிவராஜா [விவேகானந்த ம. வி கொழும்பு]. எம். ஏ. எஸ். அருளானந்தம் [செல். கிளாயஸ் பாலிக ம. வி], ஜி. ஏகாம்பரம் [வெள்ளவத்தை அரசினர் தமிழ்ப் பாடசாலை பாமன்கடை], ஆர். சுஸ்வரக்குமார் [குட்செப்பேர்ட் ஜி ரி ஜி பாடசாலை கொட்டாஞ்சேனை] கே. ஜெகதீசன் [செல். கிளாயஸ் பாலிக ம. வி], என் குகசிங்கம் [தெஹிவல தமிழ் வித்தியாலயம் தெஹிவல], எஸ் சிவமூர்த்தி [இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி கொழும்பு], நாகேஸ்வரி ஜே. [இந்துக் கல்லூரி கொழும்பு], ஜி. நவரத்தினம் [டி. எஸ். சேனநாயக்கா வித்தியாலயம்], சி. அற்புதசிங்கம் [தெஹிவல மெல்டா முஸ்லிம் பாடசாலை, தெஹிவல], டி. எஸ். அருமைநாயகம் [கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலயம்]. எஸ். சிவநாயகம் [ஒ: யசேகரபுர ஜி. ரி. எம். பாடசாலை ராஜகிரிய], இ. குமரேசன் [பம்பலப்பிட்டி ஆர். சி ரி. எம். வி. கொழும்பு] சுந்தரலிங்கம் செல். கிளாயஸ் பாலிக ம. வி. வெள்ளவத்தை], ஜே நடராஜா [கொட்டாஞ்சேனை ஜி. ரி. எம். வித்தியாலயம் கொழும்பு] இ. ஜே. மகேந்திரா முஸ்லிம் மகளிர் கல்லூரி கொழும்பு], பி எவ். ஆர். அந்தோனிப்பிள்ளை [வூல்வெண்டால் பாலிக கொழும்பு], பி. நாகரத்தினம் [இசிபத்தான ம. வி. கொழும்பு], ஆர். சுந்தரநாயகம் [உப்புக்குளம் எம். ரி. வி. கொட்டாஞ்சேனை கொழும்பு], ஜ தாமோதரம் பிள்ளை [நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம் கொழும்பு], பி. கார்த்திகேயன [வூல்வெண்டல் பாலிக கொழும்பு]

எஸ் ஞானசேகர (சென்ற் அந்தனீஸ் ஆண்கள் வித்தியாலயம், கொழும்பு] பி தம்பிமுத்து (வெள்ளவத்தை ஜி ரி. எம். வி கொழும்பு) எஸ். ஜேசுதாசன் (உப்புக்குளம் மெதடிஸ் ரி. எம். பாடசாலை, கொட்டாஞ்சேனை, கொழும்பு) ஐ. ஞானநாயகம் [தெஹிவல தமிழ் வித்தியாலயம், ஸ்டேஷன் ரோட், தெஹிவல) பி. ஸ்ரீஸ்கந்தராசா (தொண்டர் வித்தியாலயம், கொழும்பு) பி சண்முகலிங்கம் [தெஹிவல தமிழ் வித்தியாலயம் தெஹிவல] [illegible] யுக்னெஸ்ரஸ்

[5 ம் பக்கம் பார்க்க-

யாழ். பல்கலைக்கழகத்துடன்

# ஆயுர்வேத கல்லூரி இணைப்பு: வைத்திய சம்மேளனம் மகிழ்ச்சி"

## அமைப்பாளர் சுகந்தன் அறிக்கை

(பண்டத்தரிப்பு)

"நீண்டகாலமாக பலராலும் எதிர்பார்க்கப்பட்ட கைதடி சித்த ஆயுர்வேதக் கல்லூரி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தில் இயங்கவிருப்பதையிட்டு வட இலங்கைசித்தஆயுர்வேதவைத்தியர்கள் சம்மேளனம் மகிழ்ச்சியடைவதாக அதன் அமைப்பாளர் டாக்டர் சுகந்தன் இன்றுசித்தம்பி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"பூரணத்துவம் வாய்ந்த சித்த ஆயுர்வேதக் கல்லூரி யொன்றை யாழ். மாவட்டத்தில் அமைக்கவேண்டும் என்று வட இலங்கைச் சித்த ஆயுர்வேத சம்மேளனம் விடுத்த வேண்டுகோளையும் இடைவிடாதமுயற்சியையும் அடுத்து கடந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் கைதடியில் கல்லூரிக்கென நிரந்தரக் கட்டிடத்தை நிறுவியது ஆயினும் பல தடைகளினால் திறக்கப்படாதிருந்த இக்கல்லூரியை விரைவில் திறந்து இயங்கச் செய்யுமாறு எமது சம்மேளனம் ஜனாதிபதி, பிரதமமந்திரி ஆகியோருக்கு மகஜர்கள் தயாரித்து அனுப்பிவைத்தது டன் பல்கலைக்கழக மானியக் குழுத்தலைவர் கலாநிதி ஸ்டான்லிகல்பகேயுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடாத்தியது. அத்துடன் எமது முயற்சியினால் யாழ் மாநரசபையும் இக்கல்லூரியைவிரைவில் திறக்குமாறு கோரி தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றி சுதேசவைத்திய அமைச்சருக்கு அனுப்பிவைத்தது.

எதிர்வரும் 17-ம் திகதி சனிக்கிழமையன்று இக்கல்லூரி திறக்கப்படுவது சித்த ஆயுர்வேத வைத்தியத்துறையின் வளர்ச்சிக்கு ஒரு படியாக அமைவதுடன் தமிழ்மாணவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை. (கு

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 2-ம் திகதி

(15—3—84)

வியாழக்கிழமை

மேடம்: செய்தொழிலால் சிறப்படைவதற்கு இடமுண்டு புதிய கண்டுபிடிப்புகளுக்கும் இடமேற்படும் பொறியியலாளர்களுக்கு சிறப்பான தினம் சிலருக்கு அரசினர் விருதும் கிடைக்கலாம் தொடர்புகளிலும் திருப்தி உண்டு.

இடபம்: வாழ்க்கை இன்ற மல்லிகைத்தோட்டம் போல மணம் பரப்பிக் கொண்டிருக்கும் காதல் சிட்டுக்களுக்கு இன்று கவர்ச்சிகரமான தினம் பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும்.

மிதுனம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும் ஏமாற்றம் தாக்கும் விந்தையான பேச்சு வேடிக்கை காட்டும்.

கடகம்: அவசர புத்தியினால் இன்று விபரீதங்கள் விளையலாம் கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும்.

சிம்மம்: பேச்சுவன்மையினால் பெரும் புகழ்சேரும்பெரியோர்களும் ஆசி கூறுவர் அரசியல்வாதிகள் அதிக செல்வாக்கைப் பெறுவர்.

கன்னி: எதிலும் அவசரக் கோலம் தென்படும் சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு எதிர்பார்த்த வரவுகளும் தடைபடக்கூடும் இளமை நினைவுகள் வேதனையைத்தரும் மனத்திடம் மருந்தாகும்.

துலாம்: தடைப்பட்ட காரியங்களில் நல்ல முடிவுவரும் தாய்வழிப் பெருமையுண்டு வாகன நலமுடன் வாழ்விலும் சுகம் காணும்.

விருச்சிகம்: செய்தொழில் சிறப்புப் பெறும் வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியைத் தேடித் தரும்செய்தியும் கிடைக்கும்.

தனுசு: உறவாடிக் கெடுப்பதற்கு பகைவர்கள்வருவர் உற்சாகம் குன்றும் பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும் சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்

மகரம்: களஸ்திர வழியாக மகிழ்ச்சிக்கு இடமுண்டுபிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் காதலர்கள் வாழ்வில் திகதிப்பான சம்பவம் நடைபெறும் புத்திர வழியாலும் மகிழ்ச்சி உண்டு.

கும்பம்: பிரச்னைகள் மேலும் சிக்கலாகும் உணவு விடயத்தில் பிரியக் குறைவுதென்படும் கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று உடல் நலனில் அதிக கவனம் வேண்டும்.

மீனம்: பிதா வழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் ஏற்படும் புண்ணிய காரியங்களில் மனம் நாடும் நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

திருமலை வே. ரவீந்திரன்

# ரூபவாஹினியில் இன்று

மாலை:

6-00 சிறுவர் நிகழ்ச்சி [ஆங்கிலம்]

6-55 செய்திகள் (தமிழ்)

7-15 'ஜாதக கதைகள்' பொம்மலாட்டம் (சிங்களம்)

7-55 இசை நிகழ்ச்சி (சிங்களம்)

8-15 செய்திகள் (சிங்களம்)

8-35 குறுந்திரைப்படம் (சிங்களம்)

9-05 உலக நடனங்கள் [நோர்வே, டென்மார்க்]

9-30 செய்திகள் (ஆங்கிலம்)

10-00 'வக்னர்' தொலைக்காட்சி சித்திரம் (ஆங்கிலம்)

10-30 உலகச் செய்தித் தலைப்புகள்

10-35 வக்னர் தொடர்ச்சி

10-55 நிகழ்ச்சிகள் முடிவு.

## தொலைக்காட்சி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணையிலுள்ள இன்னர் நிலையத்தில் செவிப்புலனற்றோருக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடந்த யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் தொலைக்காட்சிபெட்டி அன்பளிப்பு செய்யப்பட்டது.

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதென்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது வெள்ள அகதிகளுக்கு உடுபிடவைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## விவாகப் பதிவாளர்

(காரைநகர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவுப்பகுதி விவாகப் பதிவுப் பிரிவின் காரைநகர் பகுதிக்கு விவாகப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பப்பத்திரத்திற்கான முடிவு திகதி இம் மாதம் 23-ம் திகதியாகும். தீவுப்பகுதி விவாகப் பதிவுப் பிரிவின் காரைநகர் பகுதியில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள் விவாகமான ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (கு)

## சாரணர்களுக்கு பாராட்டு

(கிளிநொச்சி)

இரணைமடுக்குளம் உடைப்பெடுக்கும் ஆபத்தை பொதுமக்களுக்கும், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் தகுந்த நேரத்தில் அறிவித்து. தடுத்தமைக்காக வட்டக்கச்சி மகா வித்தியாலய சாரணர் குழுத் தலைவர் திரு மா. புவனேந்திரனும், ஜனாதிபதி சாரணர் திரு க. மணியழகனும் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் திரு. பி. குமாரசாமியினால் பாராட்டப்பட்டுள்ளனர்.

இரணைமடுக்குளம் உடைப்பெடுக்கும் அபாயத்தைத் தடுக்கும் சிரமதானப்பணியில் பொதுமக்கள், விவசாயிகளுடன் வட்டக்கச்சி மகாவித்தியாலய சாரணர்களும், கிளிநொச்சி மகாவித்தியாலய சாரணர்களும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (வெ)

# "சகல பட்டதாரிகளுக்கும் பட்டதாரிச் சம்பளம் விரைவில் கிடைக்கும்"

## இளைஞர் விவகார இயக்குநர் தகவல்!

(கொழும்பு)

வாழ்க்கையில் அரும்பெரும் பணியை மேற்கொள்வதற்காக அடியெடுத்துவைத்துள்ள கலைப்பட்டதாரிகளாகிய நீங்கள் உங்களை அர்ப்பணித்து சேவையாற்றுங்கள். வாழ்க்கையில் அதி உன்னத இடத்தைப்பெறுவீர்கள்."

இவ்வாறு கல்விச்சேவைக் குழு உறுப்பினரும் திறந்த பல்கலைக்கழகத் தலைவருமான டாக்டர் ஆ. கந்தையா புதிய தமிழ்கலைப்பட்டதாரி ஆசிரியர் மத்தியில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: "நாட்டின் எதிர்காலச் சந்ததியினரைக் கட்டி எழுப்ப வேண்டிய பணி உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை உணர்ந்து சொல்லுங்கள் ஆசிரியர் சேவைக்குழு உறுப்பினராகப் பணியாற்றி வரும் நான் உங்களுக்கு மட்டுமல்ல சகல ஆசிரியர்களுக்கும் கடமை சிறப்புறவும் கஷ்ட நஷ்டங்களை நீக்கவும் வேண்டிய உதவிகளைச் செய்வேன்.

இளைஞர் வேலைவாய்ப்பு திட்டமிடல் இயக்குநர் திரு. கருணாசேன கொடித்துவக் பேசுகையில் கூறியதாவது!

"82ம் ஆண்டுக்கு முன்பு பட்டம்பெற்ற சகலருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. 82ல் பட்டம்பெற்றவர்களுக்குஇவ்வாண்டு இறுதிக்குள் வேலைவாய்ப்பு வழங்கப் பட்டுவிடும்.

முன்னைய அரசின் நடவடிக்கை காரணமாக பல பட்டதாரிகள் இன்று எழுதுவினைஞர்களாகக் கடமையாற்றுகிறார்கள். எமது காலத்தில் நிச்சயம் இது நடக்காது.

ஏற்கனவே நியமனம் பெற்றும் இன்னமும் பட்டதாரிச் சம்பளம் பெறாத சகல பட்டதாரிகளுக்கும் விரைவில் பட்டதாரிச் சம்பளம் வழங்கப் படும்." (இ-கு)

# வடக்கு, கிழக்கில் இடமாற்றம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

செல். கிளாயஸ் பி. எம். வி கொழும்பு) எஸ். மாணிக்கவாசகர் (கொழும்பு இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி) என் தம்பிமுத்து (கொழும்பு, இசிப்பத்தான கனிஷ்ட பாடசாலை] கோவிந்தசாமி தம்பிராசா (டி. எஸ். சேனநாயக்கா வித்தியாலயம், கொழும்பு ஏ வி. கணபதிப்பிள்ளை ஆறுமுகம் [றோயல் கல்லூரி, கொழும்பு] சிதம்பரப்பிள்ளை சிவராசா (சென்ற் அந்தனீஸ் ஆண்கள் வித்தியாலயம், கொழும்பு] கந்தசாமி குகநேசன் (றோயல் கல்லூரி, கொழும்பு) நாகமுத்து நவரட்ணசிங்கம் (கொழும்பு இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி செல்வி எஸ். வேலுப்பிள்ளை (கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலயம் செல்வி வி முத்தையா [கொழும்பு சென்ற் அந்தனீஸ் பி எம். வி] செல்வி சுகர்னியா ரசஜநாயகம் (தமிழ் கலவன்பாடசாலை, முத்துவெலமாவத்த, கொழும்பு] செல்வி விமலாதேவி செல்லத்துரை [கொழும்பு கணபதி வித்தியாலயம்] செல்வி பி சுப்பிரமணியம் மஹாலத்த ஜி ரி. எம். எஸ், கொழும்பு) செல்வி கனகம்மா அப்புக்குட்டி [பாத்திமா முஸ்லிம்மகா வித்தியாலயம், கொழும்பு] செல்வி தனலட்சுமி தம்பிஐயா [இந்துக் கல்லூரி, கொழும்பு] செல்வி எஸ். விநாசித்தம்பி [டி. எஸ். சேனநாயக்க ம. வி. கொழும்பு] செல்வி வசந்தி நடராத்தினம் [இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு] செல்வி பி. தங்கராசா [கொழும்பு இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி] செல்வி தவரத்தினம் சத்தியபாமா பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி] செல்வி கஸ்தூரிமலர் சின்னத்துரை (புளுமெண்டால் தமிழ் வித்தியாலயம், கொழும்பு]

கம்பஹாவிலிருந்து யாழ்ப்பாணம்

செந்திமணி கந்தையா [அல் - முஸ்தபா கே. வி பட்டிஹென] மகாதேவி கந்தையா [அல் - முபாரக் ம. ம. வி, கம்பஹா] வேதநாயகி சிவப்பிரகாசம் (அல்முபாரக் ம. ம. வி. கம்பகா) ஜெயந்தி செல்வராஜன் (முஸ்தபா கே. வி. பட்டிஹென, மல்வான) சிவகுமாரி நடராஜா (சென்ற் அந்தனீஸ் கல்லூரி வத்தளை) நந்தினி அஷ்ரவ ம. வி. வத்தளை) மேரி மொன்சிரேசா ஞானப்பிரகாசம் (சென்ற் ஆன்ஸ் பாலிக ம. வி. வத்தளை) சிவஞானரத்தினம் செல்லையா (குணுப்பிட்டிய இந்து தமிழ் கலவன் பாடசாலை) நடராஜன் குமணன் குணுப்பிட்டிய அரசினர் முஸ்லிம் வித்தியாலயம், வத்தளை)

இரத்தினபுரியிலிருந்து யாழ்ப்பாணம்

கே. ராஜேஸ்வரி (பெற்றிகல ஜி. ரி. வி. பாலாங்கொட) மாலினி நடராஜா ஹிடலென ரி; வி இரத்தினபுரி) ரூதிக்பாலசிங்கம் (பொபெட்ட அரசினர் தமிழ் பாடசாலை இரத்தினபுரி) லோகேஸ்வரி கந்தையா [பலாங்கொட தமிழ்மகாவித்தியாலயம், பலாங்கொட] செல்வர் சிங்கராஜா (நொறாவ தமிழ் வித்தியாலயம். இரத்தினபுரி) ஐயாத்துரை மனோகரன் (வெல்லோபிட்டிய தமிழ் வித்தியாலயம், வெல்லோபிட்டிய)

(நாளை தொடரும்)

## அடையாள அட்டை யாருடையது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு எம் எம். அக்பர் என்பவர் திரு நமசிவாயம் விமலராசா என்பவரின் அடையாள அட்டையையும், இருபாலையில் உள்ள திரு த. குமாரதாஸ் என்பவர் திரு கணபதிப்பிள்ளை பரமானந்தம் என்பவரின் அடையாள அட்டையையும், யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் கடமையாற்றுகின்ற திரு கே எம். யோகேஸ்வரன் என்பவர் திரு கே. தர்மலிங்கத்தின் எவற்றோனிக் நோட்ஸ் கொப்பிஒன்றையும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த திரு க. மயில்வாகனம் என்பவர் இரண்டு மோட்டார் பைசிக்கிள் [CORONA] திறப்புக்களையும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில்வந்து பெற்றுக் கொள்ளவும்.

## சர்வதேச மகளிர் தினவிழா

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட கூட்டுறவு மகளிர் குழு சர்வதேச மகளிர் தினவிழாவை எதிர்வரும் சனிக்கிழமையன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடவுள்ளது.

## யாழ். மாநகர ஆணையாருக்கு பாராட்டு

[சாவகச்சேரி]

யாழ். மாநகராட்சி மன்றத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மலசலகூடங்களை, குழி மலசலகூடங்களாக மாற்றுவதற்கு பெரும் முயற்சிஎடுத்திருக்கும், யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி வி கே சிவஞானத்தினை அறவழிப் போராட்டக்குழு பாராட்டியுள்ளது

ஆணையாளர் திரு. சிவஞானத்தின் முன்மாதிரிச் சேவையினை ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் வெகுவிரைவில் பின்பற்றினால் வரவேற்கக் கூடியதாக விருக்கும் எனகுழுவினர் தெரிவித்துள்ளனர். (கு)


## தரமான உற்பத்திகள்

1. கொள்கலன்கள் (TANKS)
   சிறியனவும் பெரியனவும், வானளவில் பொருத்தப்படுவனவும், நிரந்தரமாக நிர்மாணிக்கப்படுவனவும்.
2. நெல் அவிக்கும் தொட்டியும், உமி எரிக்கும் கருவியும் (Parboiling Tank and Husk Blower)
3. ROOF TRUSSES
4. சுருக்குக் கதவுகள்
   உறுதியும் செம்மையும் வாய்ந்த வேலை; சிக்கனம்; துரித சேவை; வேலைத்தரத்துக்கு உத்தரவாதம்.

எங்கள் பொறியியலாளர்களைச் சந்தியுங்கள்.

டைனமிக் என்ஜினியரிங் லிமிட்.

43, பாக்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்ட பாடசாலைக் கிரிக்கெட்:

# காப்டன் சுதர்சனனின் அபாரத் துடுப்பாட்டம்!

## இதுவரை ஆட்டமிழக்காமல் மூன்று 'செஞ்சரிகள்'

விளையாட்டு நிருபர் 'தேவா'

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில், யாழ். மத்திய கல்லூரியின் வெற்றிகள் பாராட்டக் கூடியதாகும்.

இக்கல்லூரி அடுத்தடுத்து கலந்து கொண்ட இரு போட்டிகளிலும், இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ். மத்திய கல்லூரிக் கோஷ்டியின் காப்டன் வி. சுதர்சனன் இவ்விரு போட்டிகளிலும் ஆட்டமிழக்காமல் இரு 'செஞ்சரி'களைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இவர் இதுவரை மூன்று 'செஞ்சரி'களை ஆட்டமிழக்காமல் பெற்று யாழ். மாவட்டக் கல்லூரிகளின் துடுப்பாடி வீரர்கள் வரிசையில் முன்னணி வகிக்கின்றார்.

கடந்த வாரக் கிரிக்கெட் போட்டிகளில், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர் கிங்ஸிலி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீரர் செந்தில்நாதன் ஆகியோரும் 'செஞ்சரி'களை அடித்தார்கள்.

### மத்திய கல்லூரி மகாஜன

யாழ். மத்திய கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் இரண்டு விக்கெட் நஷ்டத்துக்கு 283 ஓட்டங்களை 195 நிமிடங்களில் மிகவேகமாகப் பெற்றது. காப்டன் வி. சுதர்சன் ஆட்டமிழக்காமல் 112 ஓட்டங்களை 86 நிமிடங்களில் பெற்றார். இதில் 15 'பவுண்றி'களும் 2 'சிக்ஸ்ஸரும்' அடங்கும். கருணராசா 53 ஓட்டங்களையும், மதிவதனன் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 41 ஓட்டங்களைப் பெற்றது. ஜேமான் 20 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார். மகாஜனக் கல்லூரி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 111 ஓட்டங்களைப் பெற்றது. வி. சுதர்சனன் 44 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

### மானிப்பாய் இந்து தோல்வி

யாழ். மத்திய கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியிலும், யாழ். மத்திய கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் 2 விக்கெட் நஷ்டத்துக்கு 281 ஓட்டங்களைப் பெற்றது. மதிவதனன் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களையும், காப்டன் வி. சுதர்சனன் ஆட்டமிழக்காமல் 111 ஓட்டங்களையும் பெற்றனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 125 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 37 ஓட்டங்களையும் பெற்றது.

### சென். பற்றிக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சென். பற்றிக்ஸ் இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

சென். பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 236 ஓட்டங்களைப் பெற்றது. கிங்ஸிலி 121 ஓட்டங்களை பெற்றார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 55 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 108 ஓட்டங்களையும் பெற்றது.

### யூனியன் வெற்றி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யூனியன் கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

யூனியன் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 314 ஓட்டங்களைப் பெற்றது. செந்தில்நாதன் 112 ஓட்டங்களைப் பெற்றார்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 72 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 48 ஓட்டங்களையும் பெற்றது.

### வெற்றி-தோல்வி இல்லை

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

சென்ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 149 ஓட்டங்களையும் யாழ்ப்பாணக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 86 ஓட்டங்களையும், 2வது இன்னிங்ஸில் 5 விக்கெட் நஷ்டத்துக்கு 105 ஓட்டங்களையும் பெற்றது.

### இந்து-ஹாட்லி

யாழ். இந்துக்கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டம் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

ஹாட்லிக்கல்லூரி முதல் இன்னிங்ஸில் 184 ஓட்டங்களையும், 2வது இன்னிங்ஸில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 195 ஓட்டங்களையும் பெற்றது.

யாழ். இந்து முதல் இன்னிங்ஸில் 136 ஓட்டங்களையும், 2வது இன்னிங்ஸில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 88 ஓட்டங்களையும் பெற்றது. (வி)

## ஓய்வுபெறும் கல்லூரி அதிபர்



யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக் கல்லூரி ... யாழ்ப்பாணம் சுகாதாரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் சச்சிதானந்தம் ஆசிரியசேவையைக் கைக்கொண்டு தனது அறுபதாவது வயதில் இன்று (15-3-84) கல்விச்சேவையில் இருந்து இளைப்பாறுகின்றார்.

சச்சிதானந்தம் அவர்களிடம் காணப்படும் அடிப்படை அம்சம் நேர்மையாகும். இந்த சக்தியினால் அவர் அஞ்சாமை கொண்டவராக விளங்கினார். தனது கடமைகளை தனது அதிகாரத்தை அஞ்சாநெஞ்சுடன் நிறைவேற்றி மூதறிஞர் மாணவர் நலன் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு ஆண்டவன் அர்ப்பணமாகச் செயலாற்றினார். புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சமமாகவே நோக்கும் யோகியாவார். அவர்மீது எவராலும் செல்வாக்குச் செலுத்த முடியாது. தனது தீர்மானத்தை நிறைவேற்றும் தீரர். அவர் விளைவுகளைப் பற்றி அக்கறை கொள்பவர் அல்ல. தன்னுடைய நலனைப்பற்றிச் சிந்திப்பவர் அல்ல. இதனால் ஆயிரக்கணக்கான மாணவச் செல்வங்கள் நலம் பெற்றனர். எமது சமுதாயத்தின் நெஞ்சில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார்.

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராகவும் விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாகவும் இருந்து ஆற்றிய அளப்பரிய சேவைகளையும், பெற்ற வெற்றிகளையும் நாம் அறிவோம். பின் கல்விச் சேவை பிறபதவிகளை வகித்து அதிபராகவும், பிரதம கல்வி அதிகாரியாக கல்வி அமைச்சில் உயர்பதவியையும் வகித்து எமது வேண்டுகோளை ஏற்று எமது கல்லூரியின் முன்னேற்றத்துக்காக அதிபர் பதவியை ஏற்று மிகக்குறுகிய காலத்தில் பாடசாலையைச் சகல துறைகளிலும் வளர்த்து இன்று பலம் வாய்ந்த வித்தியாலயமாக உயர்த்தி எமக்கு அளித்துவிட்டுச்செல்லும் பெருமகன் இராமலிங்கம் சச்சிதானந்தம் அவர்களை சமுதாய மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள்.

சுந்தரமடத்தைப் பிறப்பிடமாகவும் உடுவிலைப்புகுந்தஇடமாகவும் கொண்ட பெரியார் இவ்வித்தியாலயத்தை உயர்த்துவதற்காக செய்த தியாகம் அளப்பரியது. மாணவர் ஒழுங்கு கட்டுப்பாட்டிலும் ஆசிரியர்களின் நிர்வாகத்திலும் ஒழுங்கை நிலைச்செய்தது இக்கல்லூரியின் அண்மைக்காலத்தில் நிகழ்ந்த அற்புதமே ஆகும்.

அவர் பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு ஆலோசகராக, வழிகாட்டியாக உற்ற நண்பனாக ஆற்றியதொண்டு மறக்க முடியாதது. அவரிடம் நாம் பூரண நம்பிக்கை கொண்டிருந்தோம் அவர் விசுவாசமாகவும் திருப்திகரமாகவும் கடமையைப்புரிந்தார். அவரைப் போற்றுவதிலும் வாழ்த்துவதிலும் நன்றி செலுத்துவதிலும் எமது கடமைப்பாட்டை வெளிப்படுத்துகிறோம்.

சு செ மகாதேவா,
பாடசாலை அபிவிருத்திச் சபை
உபதலைவர்

15-3-84

## நூல் வெளியீடு

(சுழிபுரம்)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் வைத்தியகலாநிதி செ. நாகநாதன் எழுதிய 'சலரோக தடுப்பு' என்னும் தமிழ் நூல் வெளியீடு எதிர்வரும் சனிக்கிழமை காலை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்று சலரோகத் தடுப்புச் சங்கம் ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.


உங்கள் தங்க நகைகளுக்குப் பணம் தேவையா?



42 வருடகால சேவை

TFC

த பினன்ஸ் கொம்பனி லிமிரெட்
249, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.



யாழ். நகர மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில்

"ருஜாந்தி பேணிச்சர்ஸ்"



மரத்தளபாடங்களைத் தவணைமுறைக்கட்டணத்தில்
பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்

"ருஜாந்தி பேணிச்சர்ஸ்"

248/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் சினிமா முன்பாக), யாழ்ப்பாணம்.

✯ சியஸ்ரா ✯ ஆர்ப்பிபோம் ✯ ஸ்ரீல் கதிரைகளும்

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். நகருக்குள் விநியோகம் செய்ய இலவச வாகன வசதியுண்டு

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 6-30, 9-30
சிவாஜி - K R. விஜயா
தவப் புதல்வன்
(புத்தம் புதிய பிரதி)

மனோகரா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
Michael york- David Niven
A MAN CALLED
INTREPID

வெலிங்டன் மாலிப்பொதி
தினசரி 3-30, 6-00
ஜெமினி - சரோஜாதேவி
கல்யாண பரிசு

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ANNIE
More Suitable for School Children

17-3-84 முதல்
தாயைக் காத்த
தனயன்

ராஜா (யாழ்.நகர்)
தினசரி 10-30, 3-30, 6-00
9-00
கமல்—ஸ்ரீதேவி— இசை
மீண்டும்கோகிலா
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-மாதவி
டிக் டிக் டிக்
(சஸ்மன்கலர்)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
4-45, 7-00 P. M.
Jim Brown—Jim Kelly
Fred Williamson
Richard Roundtree
One Down
Two to Go
Action Packed
By popular demand
extended till 15 th

கடைசி முறையாக
யாழ். நகரில் காண்பிக்கப்
படுகிறது
வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்—தேவிகா
எம். ஆர் ராதா-வீரப்பா
நடித்த
ஆனந்தஜோதி
From 17-3-84
SCANNERS
Their thoughts can kill

லிடோ (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவீந்தர் - ரூபா
ஒரு தலைராகம்
தமிழகத்தில் 365 நாட்
களுக்கு மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்

வெலிங்டன்
தினசரி 10-30, 2-15,
4-30, 7-00, 9-15
Sean Connery in
THE WIND AND
THE LION
(more suitable for adults)
(CinemasCope - Color)

## 'சிற்றம்பல மாஸ்டர்'



சைவ சமய வளர்ச்சியில் தனக்கெனத் தனி இடத்தைக் கொண்டிருந்தவர் ஓய்வுபெற்ற தமிழாசிரியரான சைவப் பெருமகன் திரு. க. சிற்றம்பலம் அவர்கள் 'சிற்றம்பல மாஸ்டர்' என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட அவ்வூர் சமீபத்தில் காலமானது காரைநகர் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும்.

பல வகைகளாலும் இக்கிராம மக்களின் பண்பாட்டின்சிகரமாக விளங்கிய சிற்றம்பலம் மாஸ்டர் தனது 74வது வயதில் அண்மையில் சிவபதமடைந்தார். பிரதிபலன் கருதாமல் 39 வருடங்கள் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றநிலையிலும், காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் கோபுரத்திருப்பணிச் சபையின் தலைவராக இருந்து, தடைப்பட்டிருந்த கோபுரத்திருப்பணி தொடருவதற்கு அடிகோலியவராவர். ஈழத்துச் சிதம்பரம் அன்னதானசபை, மணிவாசகர்சபை, காரைநகர் சைவமாசபை, ஆகியவற்றின் தலைவராகவும் நிர்வாக உறுப்பினராகவும் இருந்து காரைநகரில் சைவசமயம் வளர்ச்சிபெற அரும்பாடுபட்டவர்.

சிற்றம்பல மாஸ்டர் சமய அபிமானி மட்டுமல்ல தமிழபிமானியுமாவார். தந்தை செல்வநாயகம் காலத்தில் காரைநகர் தமிழரசுக்கட்சி அமைப்பாளரும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவராகவும் இருந்து தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டாற்றியவர். இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களிடம் ஆசிரிய பயிற்சிக் காலத்தில் மாணவராக கல்வி கற்றது மட்டுமல்லாமல் அவரின் கொள்கைகளை அடிபொற்றி வாழ்ந்தவர்.

அவ்வூர் மக்கள் ஈழத்துச் சிதம்பர திருப்பணிக்கு காட்டும் ஆர்வமும் ஒத்துழைப்புமே சிற்றம்பல மாஸ்டரின் ஆன்மா சாந்தியடையச் செய்யும் வைம் மாருகும்,

— க. சிறிகரன்

## டாக்டர் முருகேசம்பிள்ளை

இறந்த கல்விமானும் சிங்கப்பூரில் சிவில் நிர்வாகத்தில் சிறப்பாகக் கடமையாற்றியவரும், வைத்தியத்துறையில் கல்வியைமேற்கொண்டு அதன் மூலம் சிறந்த சேவை செய்து பலரின் நன்மதிப்பைப் பெற்றவரும், தம்மை நாடி வந்தோர்க்கெல்லாம் வேண்டிய உதவிகளை மகிழ்ச்சியுடன் செய்தவரும் தமது ஊருக்குப நாட்டுக்கும் உதவி செய்தவரும் அண்மையில் இவ்வுலகத்தினின்றும் நீங்கியவரான அல்வாயூர் டாக்டர் க. வே சு முருகேசம்பிள்ளை (ஆனந்தி) அவர்களின் வாழ்க்கை ஒரு சிறந்த வாழ்வு முறையாக அமைகின்றது.

சிவில்சேவை செய்தவர் டாக்டராக வரவேண்டுமென விரும்பி தமது மருத்துவக் கல்வியை சென்னையில் மேற்கொண்டு அக்கல்வியை கண்ணும் கருத்துமாக கற்றுத் தேறினர். கல்வியே தமது முக்கிய இலட்சியமாகக் கொண்டு மருத்துவத்தில் முதன்மையாகக் கற்று ஒரு முதற்தர வைத்தியரானர்.

''வைத்தியர் சேவையில் வறியவர்களுக்கே முதலிடம்'' என்ற எண்ணத்துடன் டாக்டர் ஆனந்தி அவர்கள் ஏழைகட்கு இலவச வைத்தியம் செய்வதுடன், அடிமட்ட மக்களுடன் அன்பாகவும், பண்பாகவும் ஆதரவாகவும் பழகி அவர்கள் உடல் வருத்தத்தையும் மனவருத்தத்தையும் அறிந்து அவர்களுக்கு இலவச மருந்துகளையும் இலவச அறிவுரைகளையும் இலவச சேவைகளையும் வழங்கினர்.

வசதி குறைந்தோருக்கு உணவு உடை உறைவிடம் கொடுத்து பணம் வேண்டியோர்க்கு பணம் கொடுத்து நிலம் வேண்டியோர்க்கு நிலம் கொடுத்து போக்குவரத்துக்கு வேண்டிய சாலைகள் கொடுத்து பொதுசன சேவைக்கு வேண்டியவற்றையெல்லாம் கொடுத்து யாவரும் நலமுடன் வாழட்டும்'' என்ற பெருந்தன்மை பேரறிவு பெரியமனம் படைத்த உத்தமர் டாக்டர் ஆனந்தி.

தமது சமுதாயத்துக்கும் தமது கிராமத்துக்கும் வசதி குறைந்தோர்க்கும் பள்ளி மாணவருக்கும் செய்த பேருதவிகள் மறக்க முடியாதவை. நல்லவர்கள் இறப்பதில்லை பலர் உள்ளத்திலும் வாழ்வார்கள்'' என்பதற்கமைய டாக்டர் ஆனந்தி அவர்கள் பலர் உள்ளத்திலும் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

பேராசிரியர்
வி க கணேசலிங்கம்

## ஆசிரியர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தினரை கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

''பாடசாலை முன்னேற்றம் கல்வி வளர்ச்சி, அபிவிருத்தித் திட்டம் என்று பிரசாரம் செய்வதிலும் பார்க்கமாணவர்கள் தேவைகளை உணர்ந்து ஆசிரியர் இடமாற்றங்களை அவ்வப்பகுதி கல்வி அதிகாரிகளின் அனுமதியுடன் செய்வதே சிலபிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உண்மையில் உதவி புரியும்'' என அதிபர் திரு. ந. சிவபாதம் தமது தலைமை உரையில் சுட்டிக்காட்டினார்.

## லெபனன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பு வந்தனர்.

இன்று காலையிலிருந்து போர் நிறுத்தத்தை அமுலுக்கு கொண்டு வருவதென்றும மாநாட்டில் முடிவு செய்யப் பட்டது.

மாநாட்டில்கலந்துகொண்ட அணைத்துக் குழுக்களிலுமிருந்து உறுப்பினர் குழு ஒன்றும் தெரிசெய்யப்பட்டது.

பெய்ருட் விமான நிலையம் உட்பட சகல விமான நிலையங்களையும் உடனடியாகத்திறக்க வேண்டும் என்றும் கேட்கப் பட்டது. (கு)

கடைசித்தினம்
15-3-84
ரீகல் (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
சோபன்...
திருமதி பார்வதி...
பயணங்கள்
முடிவதில்லை
- வண்ணம் -
From 17th
SHAMMI KAPOOR
RAJSHREE...... IN
JANWAR
- Color -
Music - Shankar
Jaikishan

## முன்மாதிரியாகத்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். தடைகளை எல்லாம் நீக்கி வளர்ந்துவரும் சிறிய பாடசாலைகளில் ஒன்றான வண்ணை இளைதம்பி வித்தியாலயத்தில் சிறுவர்களுக்கெனத்தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களைக் கொண்ட நூலகம் அமைவது ஏனைய பிரதமபாடசாலைகளும் பின்பற்றவேண்டிய பாராட்டக்கூடிய செயலாகும். சூழலிலுள்ளவர்களுடைய சிறப்பாகப் பெற்றோருடைய ஒத்துழைப்புடன் இந்த நூலகம் அமைகின்றது இதற்கான ஏற்பாடுகளைச்செய்த வித்தியாலய அதிபர் பாராட்டுக்குரியவர்''.

இவ்வாறு வண்ணை இளைய தம்பி இந்து வித்தியாலய நூலகசேவை அங்குரார்ப்பண விழாவில் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ் கல்வியதிகாரி திரு. சி. தியாகராசா கூறினர்.

வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் தலைமையில் விழா நடைபெற்றது.

தொழில் அதிபர் திரு. தி. நாகரத்தினம் வண்ணை நாச்சிமார்கோவில் பரிபாலனசபைத் தலைவர் திரு இ.வே. கந்தசாமி மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்தனர். வித்தியாலயத் துணை அதிபர் திருமதி பொ. சதாசிவம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

தொழிலதிபர் திரு. க. கனகராசா, திரு இ கணபதிப்பிள்ளை, திரு. சோ. புவனேந்திரம், திரு இ கனகசபாபதி ஆகியோர் நூல்களை மாணவர்களுக்கு வழங்கி நூலக சேவையை ஆரம்பித்துவைத்தனர்

திரு. ச. இலங்கைநாதன், திரு த. சபாரத்தினம்,, திரு ஐ சின்னத்துரை ஆகியோர் நூல்களை அன்பளிப்பாக வழங்கினர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டச் செயலாளர் திரு. வி. எஸ் சிவபாலசிங்கம், வித்தியாலய அபிவிருத்திச்சபைத் துணைத்தலைவர் திரு என். வாமதேவா. பத்திரிகையாளர் திரு க. அரசரத்தினம், யாழ். இந்து ஆரம்பபாடசாலை அதிபர் திரு செ. கனகரத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நல்லூர் வட்டாரக்கல்வியதிகாரி திரு சு. சிவநாயகமூர்த்தி சிறப்புரை ஆற்றினர்

திருநெல்வேலி சுவ்விக் இரத்தினம் பண்பாட்டு நிறுவன நூலகர் திரு. ஆ. சிவநேசச் செல்வன் ''பாடசாலை நூலகம்-அமைப்பும் பயன்பாடும்'' என்னும் பொருளில் சிறப்புரையாற்றினர். நல்லூர் கல்வி வட்டாரப் பாடசாலைகளில் நூலக அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நல்லூர் கல்விவள நிலைய ஏற்பாட்டில் இச்சிறப்புரை நிகழ்த்தப்பட்டது. கல்விவள நிலையத் திரைப்படக்காட்சியும் இடம்பெற்றது.

## முறியடிப்பு

[கொழும்பு]

நீர்கொழும்பு பொலிசார் நேற்று ஏழு லட்சம் ரூபாபெறுமதியான கடத்தல் பொருட்களைக் கைப்பற்றினர்.

60 வீடியோ டெக்குகள் லொறி ஒன்றிலிருந்து வள்ளம் ஒன்றில் ஏற்றப்பட்டபோது பொலிசார் இவற்றைக் கைப்பற்றினர்.

லொறி பறிமுதல் செய்யப்பட்டதுடன் மூவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (கு)

## இங்கிலாந்து பயணமானுர்



(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. பிலிப் சகாயறூபன் விவசாய விஞ்ஞானத்தில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக 'டப்லின்' பல்கலைக்கழகத்தினுல் அளிக்கப்பட்ட பட்டதாரி கல்வி நிதிப் புலமைப் பரிசிலை ஏற்று இங்கிலாந்து பயணமானுர்.

இவர் யாழ்ப்பாணம் ஜெக்கி விமேசன் வீதியைச் சேர்ந்த பேதுறுப்பிள்ளை பிலிப் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், யாழ். பரியோவான் கல்லூரியின் பழைய மாணவருமாவார். (சு)

## 41ம் நாள் நினைவஞ்சலி

### திருமதி சி. இராசம்மா



அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
கணேசலிங்கமும் குடும்பத்தினர்களும்
மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை. 1356

# பனை மரங்களை அழிப்பதை கட்டுப்படுத்த நடவடிக்கை!

## ஆய்வாளர் கலாநிதி மோகனதாஸ் தகவல்

(யாழ்ப்பாணம்)

"பனை அபிவிருத்திச் சபை வியாபாரத்தைமட்டும் நோக்கமாகக் கொண்ட ஒரு சபையல்ல. தென்னை அபிவிருத்திச் சபை, றப்பர் அபிவிருத்திச் சபை போன்ற ஏனைய சபைகளைப்போல் இச்சபையும் இந்நாட்டின் முக்கிய அபிவிருத்திச் சபையாகத் திகழ்கின்றது".

இவ்வாறு பனை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மகாநாட்டுக்குத் தலைமைதாங்கிக் கருத்துத் தெரிவித்த சபையின் தலைவர் திரு. க. நடராசா தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபையின் உறுப்பினரும், ஆராய்ச்சியாளருமான கலாநிதி மோகனதாஸ் இந்த மகாநாட்டை ஆரம்பித்துவைத்தார்.

கலாநிதி மோகனதாஸ் இம் மகாநாட்டைத் தொடக்கிவைத்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"ஒரு பகுதியுடன் மட்டும் இதுகாலவரை இருந்துவந்த பனம்பொருள் பாவனையும், உற்பத்தியும் இன்று நாடு முழுவதும் பரவலாக்கப்பட்டுள்ளது. வியாபார ஊக்குவிப்பும் இத்துறையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. பனைவள உற்பத்தி ஆராய்ச்சியில் பல சாதனைகளை இச்சபை கண்டுள்ளது.

"இந்தியாவில் இல்லாத அபிவிருத்தியை இலங்கையில் இத்துறையில் நாம் கண்டுள்ளோம். அரசினால் ஒதுக்கப்படும் நிதி புதிய ஆராய்ச்சிகளுக்கும் அபிவிருத்திக்கும் பயன்படுத்தப் படவிருக்கிறது."

எமது நிருபர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு திரு மோகனதாஸ் பதிலளிக்கையில், பனை மரங்களை அதிகமாக அழிப்பதை உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

வருடந்தோறும் பனைவளத்தைப் பெருக்குவதற்குப் பனம் விதைகளை நாடுபூராகவும் வழங்கி பனை நடுகையை நடத்தி வருவதாக இச்சபையின் தலைவர் தெரிவித்தார்.

வடக்குடன் மட்டும் பனை அபிவிருத்தி நடவடிக்கைகள் நில்லாது புத்தளம், அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுவருவதாகவும், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இதன் அபிவிருத்தி விஸ்தரிக்கப்பட்டு வருவதாகவும் தலைவர் கூறினார்.

(வண். நிரு)

### டாக்டர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூடாது என்று அறிவித்தார்.

தான் சார்ந்திருந்த அ. தி. மு. க. இலங்கைத் தமிழர்களுக்காக அவ்வளவு அக்கறைகாட்டவில்லை என்று குறிப்பிட்டு அக்கட்சியிலிருந்து விலகினார். 'இலங்கைத் தமிழர்களுக்காக உதவ ஒரு லட்சம் இளைஞர்களைத் திரட்டுவேன்' என்றும் அப்போது அவர் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழக முதல்வர் எம். ஜி. ஆரின் அன்புக்குரியவரான இவர், மீண்டும் அ. தி. மு. க. வில் சேர்ந்திருக்கிறார்.

### துப்பாக்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவோருக்குமேற்படி தபால் அலுவலகத்தில் வைத்து 'பென்ஷன்' வழங்கப்பட்டது. இதற்காகப் பொலிஸார் தபால் அலுவலகத்தைச் சுற்றியும், அலுவலக மேல்மாடியிலும் காவலில் ஈடுபட்டிருந்தனர்.

திடீரென மாடியிலிருந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததினால் குண்டுகள் மாடியின் கண்ணாடிகளைத் துளைத்துக் கொண்டு சென்றுவிட்டன! ஆனாலும் எவருக்கும் எதுவித காயமும் ஏற்படவில்லை. (சூ)

### பல்கலைக்கழக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுமத்தப்பட்டகூடிய குற்றங்கள் இருந்தால் உடன் சட்டமா அதிபருடன் தொடர்புகொண்டு வழக்குத் தாக்கல்செய்வதுடன் ஒரு மாதத்திற்குள் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜராக்கவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு விடுதிவசதிகள் இல்லாத காரணத்தால் பல்கலைக்கழகத்தைச் சுற்றிவர உள்ள தனியார் வீடுகளில் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் ஒருமித்துக் கைது செய்யப்படுவது தடைசெய்யப்பட வேண்டும்."

இதே நேரத்தில் இக்கோரிக்கைகளை ஜனாதிபதிக்குத் தெரிவித்து அவருடன் ஆலோசனை செய்த பின்னர் முடிவு தெரிவிக்கப்படும் என்று பேராசிரியர் சுப்பையா தம்மிடம் அறிவித்துள்ளதாகவும் சுமுகமான தீர்வு கிடைக்கும் என்றும் திரு. ஸ்ரீஸ்கந்தராசா நம்பிக்கை தெரிவித்தார். [லா]

## தேசிய சுவீப் அதிர்ஷ்ட சாலிகள்

(கொழும்பு)

நேற்று இழுக்கப்பட்ட 960-வது இலக்க தேசிய சொந்தச் சுவீப்பின் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு:
**03 S 0644**

2-ம் பரிசு:
**21 P 0655**

3-ம் பரிசு:
**01 L 0967**

கிரிக்கெட் டெஸ்ட்

## நியூஸிலாந்து 165 ஓட்டங்களினால் இலங்கையை வென்றது

(கண்டி)

நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையே கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி மிக பரபரப்பான சூழ்நிலையில் 165 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

நியூஸிலாந்து தமது 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 76 ஓட்டங்கள் என்ற நிலையிலிருந்து நேற்றைய ஆட்டத்தில் 8 விக்கெட் இழப்புக்கு 201 ஓட்டங்களை எடுத்த போது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

மதிய போசனத்தின் பின்னர் வெற்றி பெறுவதற்கு 263 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தமது இரண்டாது இன்னிங்ஸை ஆடிய இலங்கை அணி ஒரு சமயத்தில் 18 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுகளை இழந்தது. இறுதியாக 97 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இலங்கை சார்பில் ரணதுங்கா 51, கை டி அல்விஸ் 19 ஓட்டங்களைப் பெற்றனர். ஹாட்லி 4 விக்கெட்டுகளையும், போக் 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

சிறந்த கிரிக்கெட் வீரருக்கான பரிசு நியூஸிலாந்து ஆல்ரவுண்டர் ஹாட்லிக்கு கிடைத்தது. சிறந்த பந்து வீச்சு வீரருக்கான பரிசு விஜேதுங்க ஜோனுக்கு கிடைத்தது. (சூ)

### கயிற்றில் சிக்குண்டு சிறுவன் பலி

(கிளிநொச்சி)

மாட்டுப் பட்டியில் மாடொன்றைப் பிடிக்க முற்பட்ட 14 வயது சிறுவன் ஒருவன், மாட்டுடன் கட்டியிருந்த கயிற்றில் சிக்குண்டு ஸ்தலத்திலேயே பரிதாபகரமாக மரணமானான்.

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் தமிழ்ச்செல்வன் என்பவரே மரணமானவராவார். இம் மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப்பகுதி மரண விசாரணை அதிகாரி பி. வரராசசேகரம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிசைச் சேர்ந்த ஏ. இராமசாமி ஆஜர் செய்தார்.

மரணமானவரின் தாய் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து விபத்து மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார். (சூ)

### யாழ். புற்று....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடப் புற்றுநோயாளர்கள் இங்கு சிகிச்சை பெறவந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இப்புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்துக்கு வைத்திய நிபுணர் ஒருவர் இல்லாமலிருப்பதே இந்நிலையத்தை இயங்கச் செய்வதற்குத் தடையாக இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

சுகாதார அமைச்சர் இச்சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசியபோது, "தென் பகுதியிலிருந்து வைத்திய நிபுணர்கள் இங்குவர மறுப்புத் தெரிவிக்கிறார்கள். வெளிநாட்டு வைத்திய நிபுணர்களை வரவழைக்க ஏற்பாடு செய்து தருவேன்' என அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் இன்னமும் இந்த புற்றுநோய் சிகிச்சை நிலையத்திற்கு ஓர் வைத்திய நிபுணர் கிடைப்பாரா? என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருக்கிறது.

இச்சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றுவதற்கென அனுப்பப்பட்ட இரண்டு தொழில்நுட்பவியலாளர்களும் இந்நிலையம் இயங்காமையால் திரும்பிச் சென்றுவிட்டனர்.

யாழ் மாவட்டத்தில்கடமை புரியும் வைத்திய அதிகாரி ஒருவரை தெரிவுசெய்து புற்றுநோய் சிகிச்சை குறித்த குறுகிய கால பயிற்சி அளித்தபின் இந்த சிகிச்சை நிலையத்திற்கு நிரந்தரமாகக் கடமையாற்ற அனுமதிப்பதுடன் மாதம் ஒரு தடவை கொழும்பிலிருந்து விசேட வைத்திய நிபுணர் விமானத்திலாவது வந்துபோக வசதிசெய்து இப்புற்று நோய் சிகிச்சை நிலையம் இயங்க வழி வகுக்குமாறு பொதுமக்கள் சுகாதாரப் பகுதியினரைக் கோருகிறார்கள்.

### பாடசாலை கிரிக்கெட்:

## இன்றும்-நாளைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே இன்றும் நாளையும் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளின் விபரம் வருமாறு:

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி மோதும். இப்போட்டி வட்டுக்கோட்டை மைதானத்தில் நடைபெறும்.

சென் ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி மோதும். இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஒருநாள் போட்டியில் நாளை மோதும். இப்போட்டி பருத்தித்துறையில் நடைபெறும்.

சென். ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மோதும். இப்போட்டி சனிக்கிழமை மட்டும் சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெறும். [வி]

## 5 சிரேஷ்ட அதிகாரிகளுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திலுள்ள ஐந்து சிரேஷ்ட அதிகாரிகளும் ஏப்ரல் மாத முற்பகுதியில் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

அதேநேரத்தில் யாழ் செயலகத்தில் 4 வருடகாலம் சேவையாற்றிய உத்தியோகத்தர்களும் யாழ் மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம்பெறவுள்ளனராம்.

யாழ். மாவட்டச் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையா ஏப்ரல் 1ம் திகதி தொடக்கம் இடமாற்றம் பெற்றுச் செல்வது தெரிந்ததே.

திரு. தேவநேசன் நேசையாவுக்கு யாழ் செயலகத்தில் உள்ள பல்வேறு திணைக்களங்களும், மற்றும் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மட்டத்தில் தனித்தனியே பிரிவுபசார விழா' தொடர்ந்து நடத்தி வருகின்றனர். [மா]

## மரண அறிவித்தல்

### திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் 96/1, கண்டி வீதி, அரியாலையைச்சேர்ந்த திரு கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் 13-3-84ல் காலமானார். இவர் முன்னாள் நாகேஸ்வரி மில்ஸ் அன் பேக்கரி, தேனீர்க்கடை ஆகியவற்றின் உரிமையாளருமாவர்.

இவர் லெட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, யோகநாதன், பரமேஸ்வரி, சுசிலா, பரமலிங்கம் (கனடா), மாலினிமணி (கனடா), தர்மராஜ U.K.), கனகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் சின்னத்துரை, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவர்.

விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

1391

### வண்ணை வைத்தீஸ்வரர் தேர்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வைத்தீஸ்வர சிவன் கோவில் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

காலை 7-00 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து 9 மணிக்கு பஞ்சமூர்த்திகளும் தேரில் ஆரோகணிப்பர். மாலை 4-00 மணிக்கு தேரில் இருந்து சுவாமிகள் இறங்கியருளியதும் நடைபெறும் மண்டகப்படி பூசையைத் தொடர்ந்து சனி காலை தீர்த்தோற்சவம் நிகழும். (ய)

### ஜப்பான் பிக்குகள்

(மாவிட்டபுரம்)

ஜப்பானிய பிக்குகள் குழுவினர் நேற்று முன்தினம் காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகளுக்கு யாத்திரை மேற்கொண்டனர்.

காங்கேசன்துறை விநாயகர் ஆலயத்திலும், காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையிலும் தங்கியிருந்து பிரார்த்தனை மேற்கொண்டபின் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கும் விஜயம் செய்து அங்கும் தங்கியிருந்து பிரார்த்தனைகள் மேற்கொண்டனர். (சூ)

### வவனியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் வவனியாவிட்டமைப்புத்திட்டம் பகுதியில் ஒரு இளைஞர் கைது செய்யப்பட்டதன் எதிரொலியாகவே இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது. (சூ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், இலவ்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984—ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 .Eelanadu-P. O. Box 49. Telegram: Eelanadu, Telephone: 22389—24126